Kerala Gazette No. 21 dated 25th May, 2021.
**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-சி) துறை

அறிக்கை

எண் 8340/ச. இ. சி. 1/2018/சட்டம்.

2018 ஏப்ரல் 26
திருவனந்தபுரம், 1193 மேடம் 13
1940 வைசாகம் 6.

2018-ம் ஏப்ரல் மாதம் 26-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2017-ன் அவசரச்சட்டம் எண் 34

**2018-ன் கேரள முனிசிப்பாலிட்டி (இரண்டாம் திருத்த) அவசரச்சட்டம்**

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

1994-ன் கேரள முனிசிப்பாலிட்டி சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய ஒரு அவசரச்சட்டம்.

முன்னுரை.—1994-ன் கேரள முனிசிப்பாலிட்டி சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதனாலும்;

கேரள மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும் தாம் அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் நிலவுவதாக கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, எனவே, இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் கேரள முனிசிப்பாலிட்டி (இரண்டாவது திருத்த) அவசரச்சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது 2015-ம் ஆண்டு நவம்பர் 12-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. 1994-ன் 20-வது சட்டம் தற்காலிகமாக திருத்தம் செய்தல்.—இந்த அவசரச்சட்டம் அமலில் இருக்கும் காலயளவில், 1994-ன் கேரள முனிசிப்பாலிட்டி சட்டத்தின் (1994-ன் 20) (இதற்கு பிறகு முதன்மைச் சட்டம் என்று அழைக்கப்படும்), பிரிவு 3-ல் குறிப்பிட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு அமலில் இருக்கும்.

3. பிரிவு 143எ-ல் திருத்தம்.—முதன்மை சட்டத்தில் பிரிவு 143எ-ல்,-

(1) துணைப்பிரிவு (1)-ல்,-

“பதினைந்து மாதங்களுக்குள்” என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக “முப்பது மாதங்களுக்குள்” என்னும் வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பி. சதாசிவம்,

ஆளுநர்.



Salim A Digitally signed by Salim A
Date: 2021.07.09 16:46:37
+05'30'